(9)

தலை சாய்க்க

கடையைக் கட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்து சேர, எனக்கு ராத்திரி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. சாயங்காலத்திலிருந்தே வானம் இருட்டிக் கொண்டு இதோ பெய்யப் போகிறேன் என்பதுபோல என்னை பயம் காட்டிக்கொண்டிருந்தது. என் கூடவே மழையும் என் வீட்டுக்கு வந்தும் விட்டது.

எனக்குப் பயம்தான்.

மழை பெய்தால் வீடு ஒழுகும். கூரையிலிருந்து சுவர் வழியாகத் தரையில் வழியும். நாலா புறமும் தண்ணீர் தேங்கும். படுக்கையை எங்கு விரிப்பது? நான் தூங்க வேண்டும் என் மனைவி தூங்க வேண்டும். எங்கள் குழந்தை தூங்க வேண்டும். வேண்டுமானால், நான் மட்டும் படுக்கையைச் சுருட்டி அதன் மேல் உட்கார்ந்து கொண்டு, விடிய விடிய சிகரெட் துணையோடு விழித்துக் கொண்டிருக்கலாம். என்னைக் கட்டிக்கொண்ட தோஷத்திற்காக என் மனைவியும் வேண்டுமானால், என்னோடு கண் விழிக்கலாம் ஆனால் குழந்தை...? மழை வலுக்காமல், சும்மா லேசாகத் தூறிக் கொண்டிருந்தால் பரவாயில்லை! சமாளித்துக் கொள்ளலாம்.

யோசித்தவாறே, அறைக்குள் நுழைகிறேன். சுசீலாவைக் காணோம். ஒரு சொந்தக்காரர் கல்யாணத்துக்குப் போயிருப்பதாக அம்மா சொன்னாள். சரி! வரட்டும் என்று காத்திருக்கிறேன். ஏதோ ஒரு பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பிக்கிறேன்.

கொஞ்ச நேரம் கழிந்திருக்கும். மல்லிகை வாசனை என் புலனைத் தொடும்போதுதான் நிமிர்கிறேன். சுசீலா தோளில் குழந்தையோடு உள்ளே நுழைகிறாள். அவளுக்குப் பின் நிழல்

மனிதர்களை வேடிக்கைப் பார்ப்பதிலும் சுவாரஸ்யமானது எனக்கு வேறு ஒன்றும் இல்லை. நான் விரும்பவில்லையானாலும் பள்ளிக் கூடம் விடுகின்ற வரைக்கும் இவர்களை நான் பார்த்தே தீர வேண்டும். நான் உள்ளிட்டு இங்கு இவர்கள் புஜகிரீடமும், சரிகைப் பாவாடையும் கட்டிக்கொண்டு நிற்போம். எங்கள் காதுகளில் குப்பைத் தொட்டிகளில் இருந்து புறப்பட்டு வரும் ஈக்கள் மொய்த்து, மூக்கு, நெற்றி, கழுத்து, முழங்கை முதலான தேவை யில்லாத பிரதேசங்களில் மொய்க்கும் போது, இந்த அருவருப்பு பெரிய விஷயம் இல்லாதது போல எங்களுக்கு மரத்துப் போய்க் காணும். ஈக்களும், கொசுக்களும், எங்கள் சகஜீவிகளாகப் போவதில் எங்களுக்கு ஆட்சேபணைகள் இருப்பதில்லை. வாய் ஓரம் நீளும் இரண்டு பற்கள் எங்கள் நிஜமான நேற்றுகளை நினைவில் கீறி, யதார்த்தங்களை அர்த்தப்படுத்தும். அடிவானம் ஆற்றுப் படுகைச் செம்மண் வரி மணல்களாய் வியாபிக்கும்போது, அதன் கீழே நாங்கள் அற்பமாகிப் போவோம்.

காடுகள் அழிந்துபட்டதால் நாடு வாசிகளாகி, அதன் காரணமாக இடமும் காலமும் கிடைக்காத படியால், நாங்கள் தவத்தை பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் கணங்களில் செய்து முடிக்க வேண்டியதாயிற்று. ஏதோ ஒரு கொட்டகையின் மதியக் காட்சி முடிந்து ஒரு கூட்டம் திபுதிபுவென எங்கள் குடையை ஆக்ரமித்தது. நின்றவர்கள் வந்தவர்களை விரோதபாவத்தோடு பார்த்தார்கள். நேற்றாக மட்டும் இருந்திருக்குமேயானால் இவர்கள் ஒருவரோடு ஒருவர் பாய்ந்து கடித்துக் குதறி இருப்பார்கள். ஆகவே மனசுக்குள் குதறிக் கொண்டார்கள்.

எங்கள் சௌகரியத்துக்காக நாங்கள் நேற்றுச் செய்து கொண்ட அது, கடைசியாக வந்தது. நாங்கள் உயிர் பெற்றதே அதுக்காகத்தான் எனத் தோன்றும்படி, பாய்ந்தும், மிதித்தும், இடித்தும், உராசியும், இறுக்கி அடைத்துக்கொள்ள வேண்டும். என்னைத் தவிர எல்லோரும் அதற்குள் அடைத்துக் கொண்டார்கள்.

எனக்குப் பள்ளிக்கூடம் விட வேண்டும். விட்டு வரும் பையனை அழைத்துக் கொண்டு வீடு போக வேண்டும். அது கூடு எனினும் பொருந்தும். காம்பௌண்டுக்குள் மணிச் சப்தம் கேட்கிறது. சில நிமிஷங்களுக்குள் அதன் சிறைக் கதவுகள் போன்ற சரித்திரக் கோட்டைச் சுவர்கள் திறந்து கொண்டன. குழந்தைகள் விடுதலை பெற்றார்கள்.

யாரோ ஒரு ராட்சஸன் பின்னால் துரத்திக் கொண்டு வருவது போல, அவனுக்குப் பயந்து ஓடி வருவது போல, அந்தக் குழந்தைகள் ஓடி வந்தார்கள். அவர்கள் சுவாசிக்க வேண்டி இருந்தது. அவர் களுக்குப் பின்னே அவர்களைப் பயம் காட்டிய அசுரர்கள் ஒவ்வொருவராக வந்தார்கள். அப்போது தான் மடங்கி இருந்த பூக்கள் எல்லாம் மலர்ந்தன. அசுரர்கள் தம்மால் இயன்ற அளவுக்கு அழிவுப்பணி புரிந்த ஆத்ம திருப்தியோடு எந்திரத்தை எதிர்பார்த்த வாறு என் அருகில் வந்து நின்றனர். அது வந்து அதைப் பார்த்த பின்னால்தான் அவர்களுக்குத் தம் கொம்புகள் உள் இழுத்துக் கொள்ளும்.

குழந்தை ஓடி வந்து என் கையைப் பற்றியது. மெல்லிசு மெல்லிசான அந்த விரல்கள் என் மரத்துப்போன விரல்களோடு பின்னிக் கொள்ளும் போதுதான் நான் மண்ணுக்கு வருகிறேன். எனக்குள், நின்று போய் இருந்த ஏதோ ஒன்று செயலுறத் தொடங்குவதாய்த் தோன்றுகிறது. குழந்தை 'அப்பா' என்கிறான்.

குழந்தை காலையில் மலர்ந்து என்னோடு வந்தவன். காலையில் இவனைக் குளிப்பாட்டி விடுபவன் வழக்கமாக நான்தான். அவள் அந்த நேரத்தில் இட்லி சுட்டுக் கொண்டு இருப்பாள். அவள் காலை நேரங்களில் பிறந்தது தொட்டு இட்லிதான் சுட்டுக்கொண்டு இருக்கிறாள். அவள் அம்மா பிறந்தது தொட்டு இட்லி சுட்டாள். இப்போது இவள் முறை. இது செய்யும்போது யாரேனும் இவள் கைகளைத் தொட்டாலோ, அன்றி இவள் செயல்பாடுகளுக்குக் குந்தகம் ஏதேனும் நேர்ந்தாலோ அந்த க்ஷணத்திலேயே ஜீவன் கழண்டு போய்விடும் என்பதாய் எனக்குத் தோணும்.

நாங்கள் பிறக்கும்போதே பிறந்தது இது. நாளில் மூன்று அல்லது நான்கு முறை தானே இருப்பதை இது நினைவுறுத்தும். அப்போது அதை நாங்கள் நிரப்ப வேண்டும். நிரப்ப வில்லையாகில், அது மனசை முறுக்கிக் கொள்ளாமல் இருக்கும் படிக்கு இவள் மாய்ந்து இட்லி சுடுகிறாள். வேக வைப்பாள். கீழே எதையேனும் கொட்டுவாள். அவ்வப்போது சுடுவாள் எதையேனும்.

மாலைக் காலங்களில், நுகத்தடிகள் கழன்ற பிறகு, குழந்தையின் விரல்கள் நம் விரல்களோடு பிணைந்த பிறகு. இந்த ஆகாயத்தின் கீழ் வெயில் கூடுகளுக்குப் பின்னால் மறைந்து கொண்ட பிறகு, உபாதைகள் அற்று சும்மா வெறுமே ஆன பிறகு, அவள் ஜென்மம் எவ்வளவு அர்த்தமுள்ளது என்பது புரிகிறது. தூசுப் படலம்

கண்ணை மறைக்கிறது. தூசுகள் விலகினால் மாத்திரமே கண்ணுக்கு வெளிச்சம் வருகிறது.

குழந்தையின் முகம் வதங்கிப் போய் இருந்தது. வகுப்புக் கட்டடங்களுக்குள் காற்று வீசுவதில்லை. கரும் பலகைக்குப் பின்னால் இருந்து உஷ்ணம் உதிக்கிறது. எதிரில் இருக்கும் வெள்ளைச் சுவரில் அது அஸ்தமனம் ஆகிறது. இடைப்பட்ட பிரதேசத்தால் இவன் முகம் கறுகிப் போகிறது. இவன் கைகள், கால்கள் இவனுக்குத் தெரியாமலேயே கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுத்துப் போவதாக எனக்குப் புரிகிறது. மனசு இவனுக்காக ஈரம் கசிந்தது.

குழந்தையின் விரல்களைக் கையில் எடுத்துக் கொள்ளும் போதுதான் அதன் தேய்மானம் புரிகிறது. அழகின் பேரால் வெட்டி விடப்பட்டு அபத்தமாகி போகும் குரோட்டன்ஸ் செடிகளைப் போல, குழந்தைகளின் விரல்கள் தட்டையாகி, கூர்மை மழுங்கி அபத்தமாகி விடுகின்றன. இந்த முகாமுக்கு இவன் அனுப்பப்பட்டே தீர வேண்டும் என்கிற மேல், மத்திய தரத்து விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டிய நிர்ப்பந்தம் என்னைச் சூழ்ந்ததில் எனக்கு வெட்கமாக இருந்தது.

இவனுடையது போல இவன் அம்மாவின் விரல்களும் எனக்குப் பரிச்சயமானவைதான். அவை பிதுரார்ஜிதமாகி என்னிடம் வந்தவை. அவள் தாய் அவள் விரல்களை இளமைகளிலேயே அரிந்து விட்டிருந்தாள். அவளை நான் முதலில் அறிந்தபோது, அங்ஙனம் அறிந்தது அவள் விரல்களின் மூலம்தான். அவை தட்டையாக, சதுரமாக, விகசிக்கும் விஸ்தீரணம் இன்றி, புகை வாசனையோடு கூடி இருந்தன.

விரல்களும், உள்ளங்கைகளும் சேரும் இடத்தில் தோல் கெட்டித்துப் போய் சின்னச் சின்ன முடிச்சுகளாய் இருந்தன. சமதூரங்களில் இழுக்கப்படும் இரண்டு கோடுகளைப் போல நீண்டு இரண்டாம் பிறையைப் போல, முனையில் வளைந்து சேர்ந்தது.

குழந்தையின் முகம், வாடின பூவாய், கசங்கிப் போய் இருந்தது. காலையில்தான் மலர்ந்தது இது மாலைக்குள் வாடும். விடுமுறை நாட்களில் இது வாடாது. பின்னும் விரிந்து மலரும். அவன் வழக்கம் போலப் பேசத் தொடங்கினான். ஒரு வினையை அல்லது தொழிலைக் குறித்து வருவது வினைச்சொல் First Person singular Pluraled சேர்த்தால் அது Past Tense. பிற்காலச் சோழர்களில் தலை சிறந்தவன் ராஜராஜ சோழன்...

மாலைகளில் பெரும்பாலும் அவனும் நானும் நடந்துதான் வீடு திரும்புவோம். மாலைக் காலம் என்பது ஒன்று, நடந்து வரும்போது தான் பகல் காலத்துக் கிரியைகளில் இருந்து சற்று விச்ராந்தி பண்ணிக்கொள்ள முடிகிறது என்பதும் ஒன்று. மெயின் ரோட்டுக் களேபரத்தில் தப்பிக்க சின்னச் சின்ன சந்துகளின் வழியாகத் திரும்பி நடப்போம். பஸ், லாரி, கார் முதலான அசுர வாகனங்கள் தங்கள் பேரிரைச்சலால் அச்சுறுத்தாது. குறைந்த பட்சம் சைக்கிள்கள் வரும். அது பரவாயில்லை, நிம்மதியாகப் பேசிக்கொண்டு நடைபோடலாம்.

அவளது விரல்கள் நீண்டு முனையில் பிறையாக வளைந்தவை. எனவே கூர்மை இல்லாதவை. வரவர சூழ்நிலைகள் சகிக்க முடியாமல் போய்விடுகின்றன. வெயில் கடுமையாகக் காய்கிறது. விறகு எரிய அடம்பிடிக்கிறது. வெப்பம், புகை. நான், பசி என்னைத் தின்ன நடந்து வீடு வருகிறேன். இது உச்சி நேரத்தில் நடந்தது. சட்டை உள்பனியன் எல்லாம் நனைந்து, உடல் வெப்பத்தில் சூடேறிப் பின் குளிர்ந்தன.

முன்னாடி நடக்கும் மனிதர்கள் மங்கலாகத் தெரிந்தார்கள். தார் சில இடங்களில் உருகி, செருப்புகளில் அப்பிக் கொண்டு, தூக்க அவைவேறு கனமாக இருந்தன. நிழல் தரும் தருவென வீட்டுக்குள் நுழைந்தேன். எதையேனும் தின்ன வேண்டும் என்கிற பசி. குடல்கள் முறுக்கிக்கொண்டு உடல் வெலவெலத்து, காதுகள் நுண்மை கொண்டு இரைந்தன. பட்டனைக் கழட்டியவாறு, 'சோறு போடு' என்கிறேன்.

குழந்தை பெஞ்சில் உட்கார்ந்து மனப்பாடம் செய்து கொண்டிருக்கிறான். ஒரு முனையில் அவள்.

'கெடைச்சுதா...'

'இல்லே... சோறு... போடு...'

கிடைக்க வேண்டியது பணம். அவளுடைய சகோதரிக்கு கல்யாணம். அன்பளிப்புக் கடமை. என் சக்திக்கு மீறிய பணம். அலைச்சல், அலைச்சல்.

'கிடைக்கல்லேன்னா... என்னத்தப் பண்ணப் போறீங்க...!

'எதையாவது பண்ணலாம், சோறு போடு...'

'எனக்குத் தெரியும். உங்களால் முடியாது.'

'உங்களால எதுதான் முடிந்தது. வழக்கம்போல நான்தான் ஏதாவது ஏற்பாடு செய்யணும்...'

'செய்வோம். முதல்ல சோறு போடு...'

'சோறேன்னு வீட்டுக்குள்ள நுழையாதீங்க. அதுதான் தரித்திரம் நம்மைவிட்டுத் தொலையமாட்டுது—'

அந்த க்ஷணத்தில்தான் என் கோரைப் பற்கள் நீள குகையை விட்டு வெளியே வந்து கோரப் பசியோடு...

மாலைகளில் மனிதர்கள் சௌஜன்யமாகிப் போகிறார்கள். சமயங்களில் முதலாளி சிரித்துப் பேசுகிறார், சமயங்களில்தான் நண்பர்கள்கூட உண்மை பேசுகிறார்கள். சமயங்களில் தான் ஸ்திரீ கள் மனைவிகளாகவும், புருஷர்கள் கணவர்களாகவும் ஆகிறார்கள்.

லொடலொடவென்று பெரும் சப்தம் வர, நாங்கள் ஓரத்தில் ஒண்டிக் கொண்டோம். ஒரு கட்டை வண்டியை இரண்டு பேர் இழுத்துப் போனார்கள். வண்டியில் கார் டயர்கள்அடுக்கி இருந்தன.

குழந்தை கேட்டான்.

'அப்பா — நாளைக்கு லீவுதானே—'

'உம்...'

'பீச்சுக்குப் போவமா—'

'உம்...'

'இல்லப்பா... சினிமாவுக்குப் போவம்...'

'உம்...'

'அதான் ஜாலியா இருக்கும்...'

'நீதான் எங்க கூட சினிமாவுக்கே வரமாட்டறியே...'

'இல்லடா வர்றேன்...'

'அம்மா கூப்பிடற சினிமாவுக்குன்னா நீ வரமாட்டே...'

'இல்லடா வருவேன்...'

'வருவே...?'

'உம்... வருவேன்...'

'நீ...நானு...அம்மா...எல்லாம் போவோம்...'

'சரி...'

'அம்மா வந்தா அழைச்சுக்கிட்டுப் போவாயா...'

'ஏன்... போவேனே...'

'ஏம்ப்பா... அம்மாவை அடிச்சே...'

'ப்ச்... தப்புத்தான்...'

குழந்தையிடம் என்ன சொல்ல? அலுத்துக் களைத்து வந்தவனை, வாசற்படியிலேயே நிறுத்தி விசாரிக்கும் இங்கிதமற்ற தன்மை. ஆற, அமர, சாப்பிட்டு முடித்த பின்னால் பேசினால் என்ன குடி முழுகிப் போகும்.

'கோவத்துல தப்புப் பண்ணிட்டேன்... யாரையும் அடிக்கப் படாதுதான்...'

'அம்மாவுக்குந்தானே கோவம்...'

'ஆமா...'

'ஆனா அவங்க மட்டும் உன்னை ஏன் அடிக்கலே?' அவள் மட்டும் என்னை அடிக்கவில்லை. எது அவளைத் தடுத்தது மத்தியானம் என்னை, அவள் கேட்கும் விஷயத்தை சொல்ல விடாமல் தடுத்தது எது? அதைப் புரிந்துகொள்ளாமல், என்னை ஹிம்சிக்கத் தூண்டியது எது அவளை? நான் யாரை, எதை அடித்தேன்—

இரண்டு பேரும் கண்ணாமூச்சுதான் ஆடி இருக்கிறோம். கண்ணில் துணியைக் கட்டிக்கொண்டு, இருட்டாக்கிக்கொண்டு, பிடிக்கிற விளையாட்டு. நான் தூணைப் பிடிக்கிறேன்; அவள் பந்தக்காலைப் பிடிக்கிறாள்.

வீட்டுக்குள் நுழைந்ததும், குழந்தை 'அம்மா' என்கிறான், அவள் வந்து பையை வாங்கிக் கொள்கிறாள். 'சரசு...' என்று பேசத் தொடங்குகிறேன். 'உஸ்...' என்று விரலை வாயில் குறுக்காக வைத்து, 'முதல்ல காபி... அப்புறம் குளியல்... அப்புறமா உக்காந்து எல்லாம் பேசலாம்...' என்கிறாள். அவள் முகம் கழுவி, பொட்டிட்டு ஆடை மாற்றி எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டு புதுசாக நிற்கிறாள்.

நான் சுமைகளைக் களைந்து போட்டு குளிப்பதற்காகப் போனேன். சூரியன் அஸ்தமனமாகிப் போனான் உலகம் சுகமாகிறது...

1977